பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 07 2026** **7 15**

**திங்கட்கிழமை** **காலை**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் தட்டுப்பாடு இல்லாமல் உரம் கிடைப்பதை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. பிரிக்ஸ் அமைப்பின் இரண்டு நாள் மகளிர் பணிக்குழு கூட்டம் இன்று கேரள மாநிலம் கொச்சியில் தொடங்குகிறது.

3. அசாம் மாநில சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

4. மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

5. உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் தட்டுப்பாடு இல்லாமல் உரம் கிடைப்பதை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் உரம் மற்றும் உரம் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை ஏற்றி வரும் 15 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை பாதுகாப்பாக கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் 15 கப்பல்களில் 8 கப்பல்கள் 3 லட்சத்து 32 ஆயிரம் டன் யூரியாவையும், 4 கப்பல்கள் டை அமோனியம் பாஸ்பேட்டையும், மீதமுள்ள 3 கப்பல்கள் சுமார் ஒரு லட்சத்து 11 ஆயிரம் மெட்ரிக் டன் கந்தகத்தையும் ஏற்றி வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

இதனிடையே மேற்காசியாவில் ஏற்பட்ட மோதல் உலக அளவில் விநியோகத்தை பெரிய அளவில் பாதித்துள்ளதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

உர ஆலைகளுக்கான இயற்கை எரிவாயு தற்போது முழுமையாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உர இறக்குமதி மற்றும் உள்நாட்டு உற்பத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் நாடு முழுவதும் உரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

கல்வியாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125-வது பிறந்தநாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மத்திய கலாச்சார அமைச்சகம், மேற்குவங்க அரசுடன் இணைந்து, கொல்கத்தாவில் இன்று சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெறவுள்ள விழாவில், மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், மேற்குவங்க முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட அரசியல்வாதியான மறைந்த ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் பாரம்பரியத்தை கவுரவிக்கும் வகையில், அவரது 125-வது பிறந்தநாள், இரண்டு ஆண்டுகளுக்கு நாடு தழுவிய

அளவில் கொண்டாடப்படும் என்று கலாச்சார அமைச்சகம் கடந்தாண்டு அறிவித்திருந்தது.

கொல்கத்தாவின் பவானிபூரில் உள்ள டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் இல்லத்தில் தலைவர்கள் இன்று மலர் அஞ்சலி செலுத்த உள்ளனர்.

அதைத் தொடர்ந்து, டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125 அடி உயர சிலைக்கு திரு அமித் ஷா அடிக்கல் நாட்ட உள்ளார்.

டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி தொடர்பான சிறப்பு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது கொல்கத்தா செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரிக்ஸ் அமைப்பின் இரண்டு நாள் மகளிர் பணிக்குழு கூட்டம் இன்று கேரள மாநிலம் கொச்சியில் தொடங்குகிறது.

வரும் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள 'பிரிக்ஸ் நாடுகளின் மகளிர் அமைச்சர்கள் கூட்டத்திற்கு' முன்னதாக நடைபெறும் இந்தகூட்டத்தில் உறுப்பு நாடுகளின் மூத்த அரசு அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் அதிகாரம் பெறுதல், நிர்வாகம் மற்றும் தலைமைத்துவப் பொறுப்புகளில் பெண்களை அமர்த்துதல், நிதி உள்ளடக்கம், பெண் தொழில்முனைவோர் திறன் மேம்பாடு, காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்தில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

<<<<>>>>

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் இந்தியா தலைமையில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கொள்கை குறித்த அரசுகளுக்கிடையேயான நிபுணர் குழுவின் ஒன்பதாவது அமர்வு இன்று தொடங்க உள்ளது.

ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு இந்த மூன்று நாள் அமர்வை வரும் 8-ம் தேதி வரை நடத்துகிறது.

இந்த அமர்வில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகள், நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விவாதிக்க உள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஐநா பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் கொள்கைகள், இந்த அமர்வின்போது அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட உள்ளன.

இந்தக் கொள்கைகள் எந்த அளவுக்கு முக்கியம் என்ற தலைப்பிலான உயர்மட்டக் கலந்துரையாடலிலும் இந்தியா பங்கேற்கிறது.

<<<<>>>>

நாடு முழுவதிலுமுள்ள புதுமைப் படைப்பாளர்களிடமிருந்து கிடைத்த பெரும் வரவேற்பை அடுத்து, மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகம் தேசிய புத்தாக்கத் தளத்தில் புதுமையான யோசனைகளை பதிவு செய்வதற்கான காலக்கெடுவை வரும் 15ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

இதன் மூலம், மேலும் பல ஆர்வமுள்ள தொழில் முனைவோரிடமிருந்து நம்பிக்கைக்குரிய யோசனைகள் கிடைக்கும் என்று அந்த அமைச்சகம் கருதுகிறது.

மேலும் வெற்றிகரமான யோசனைகளை தொழிலாக மாற்றுவதற்கான வாய்ப்பையும் இந்த தளம் வழங்கும்.

ஆர்வமுள்ள தொழில்முனைவோர், புதுமை கண்டுபிடிப்பாளர்களிடமிருந்து இந்த இணையதளத்திற்கு ஏற்கனவே ஆயிரக்கணக்கான யோசனைகள் வந்துள்ளன.

<<<<>>>>

அசாம் மாநில சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று குவஹாத்தியில் தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தொடர், 26 நாட்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026-27ஆம் ஆண்டிற்கான ஆண்டு பட்ஜெட் வரும் 10ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்தகூட்டத் தொடரில் மாநிலத்தின் முக்கிய பிரச்சனைகளை எழுப்ப காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

<<<<>>>>

அடிப்படை உரிமைகள், பொருளாதார நிவாரணம் மற்றும் அரசியல் சுதந்திரம் கோரி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீரில் மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பாகிஸ்தான் அதிரடிப் படையினர், போராட்டக்காரர்கள் மீது

துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்துள்ளனர்.

போராட்டங்களில் ஈடுபட்ட 600-க்கும் மேற்பட்ட சமூக உரிமை ஆர்வலர்களைப் பாகிஸ்தான் அரசு கைது செய்துள்ளதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக, லண்டனில் வசிக்கும் காஷ்மீர் மக்கள் நேற்று கண்டனப் பேரணியை நடத்தினர்.

இதற்கிடையில், பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள அப்பாஸி ஷஹீத் அரசு மருத்துவமனையிலும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

நிலுவையில் உள்ள ஊதியத்தை வழங்கக் கோரியும், மருத்துவமனையின் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தியும் இளநிலை மருத்துவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், புறநோயாளிகள் சிகிச்சை பிரிவில் சேவைகள் நிறுத்தப்படும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

<<<<>>>>

கல்வியாளரும் ஜனசங்க நிறுவனருமான திரு. ஷியாமா பிரசாத் முகர்ஜியின் 125-வது பிறந்தநாளில், அவருக்குப் பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரைத் துணிச்சல், தேசியம் மற்றும் தன்னலமற்ற சேவையின் காலத்தால் அழியாத உதாரணமாக அவர் வர்ணித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் ஊடகங்களில் எழுதிய கட்டுரையில், திரு. முகர்ஜியின் பொது வாழ்க்கை இந்தியாவின் ஒற்றுமைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பால் வரையறுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினையின் போது மேற்கு வங்கம் இந்தியாவின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதை உறுதி செய்வதில் திரு. முகர்ஜி உறுதியாக நின்றார் என்றும், பின்னர் ஜம்மு மற்றும் காஷ்மீருக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள எச்சரிக்கையைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று

அம்மாநிலத்தின் பல பகுதிகளில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ராய்கட் மாவட்டத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்பதால் 'சிவப்பு எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ளது.

மும்பை, தானே, பால்கர், ரத்னகிரி மற்றும் சிந்துதுர்க் ஆகிய மாவட்டங்களுக்கு கனமழை மற்றும் பலத்த காற்று வீசும் என எச்சரிக்கையுடன் கூடிய 'ஆரஞ்சு எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு மன்குர்த் பகுதியில் உள்ள மூன்றடுக்குக் குடியிருப்பு இடிந்து விழுந்ததில், 5 குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

மணிக்கு 72 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய பலத்த காற்றினால் மும்பையில் 142 இடங்களில் மரங்கள் மற்றும் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன, இதில் 2 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஐந்து நாட்களாகப் பெய்து வரும் கனமழையினால், ராய்கட் மாவட்டத்தில் அம்பா, குண்டலிகா, சாவித்திரி மற்றும் பாடல்கங்கா ஆகிய நான்கு ஆறுகள் அபாய அளவைத் தாண்டி ஓடுகின்றன.

இதனால் குடியிருப்புப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தானே மற்றும் பால்கரில் நேற்று பெய்த கனமழையினால் இரண்டு பேர் உயிரிழந்தனர். மேலும் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

சிந்துதுர்க்கில் கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், 70 கிராமங்களுக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

கண்ணூர் மற்றும் காசர்கோடு மாவட்டங்களுக்கு மிக பலத்த மழையை குறிக்கும் வகையில் 'ஆரஞ்சு எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ளது.

எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு மற்றும் வயநாடு ஆகிய ஆறு மாவட்டங்களுக்கு கனமழையைக் குறிக்கும் 'மஞ்சள் எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் மலைப்பாங்கான பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும், அதிகாரிகளின் பாதுகாப்பு எச்சரிக்கைகளைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

லண்டனில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 150 ரன் எடுத்தது.

151 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஸ்திரேலியா, 17 புள்ளி ஒரு ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 153 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணிக்கு உலகக் கோப்பையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் திரு. ஜெய் ஷா வழங்கி பாராட்டினார்.

------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இருந்து பிரேசில் அணி வெளியேறியுள்ளது.

**<<<<The End>>>>**